**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 287 /2017 |
| Deposition of witness | | PW- 9 /LW- 9 |
| Name | | திரு. ராஜ்குமார் |
| Father's/Husband Name | | திரு. நடராஜன் |
| Village | | பாவாஜிக்கோட்டை, மதுக்கூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 35/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of May 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் பாவாஜிக்கோட்டையில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். 27.10.2016 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் வீட்டிலிருந்து மதுக்கூருக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தபோது அ.சா.1 செந்தில் எ செந்தில்குமாரி வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்க்கும் போது பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் போலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தனர். நான் என்ன பிரச்சனை என்று கேட்டேன். 1வது எதிரி பாலா எ பாலமுருகனை தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு தெரியும் என்று சொன்னேன். நான் என்னவென்று கேட்டபோது பாலா எ பாலமுருகன் வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டது சம்மந்தமாக அ.சா.1 செந்தில் எ செந்தில்குமாரி புகார் கொடுத்து அது சம்மந்தமாக விசாரணைக்கு வந்திருப்பதாக சொன்னார். பின்பு என்னிடம் சாட்சியாக இருக்க கையெப்பம் கேட்டார்கள். அதில் நானும் வினோத்குமார் என்பவரும் சாட்சியாக கையெப்பம் போட்டோம். அதில் உள்ள முதலாவது கையெழுத்து வினோத்குமாரும், இரண்டாவது கையெழுத்து நானும் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவது

கையெழுத்து என்னுடையது. அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் புகார்தாரருக்கு ஊறவினரா என்றால் இல்லை ஒரே ஊர்காரர்கள். நான் 9 வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவ இடம் கீழக்குறிச்சி to கன்னியாகுறிச்சி ரோட்டில் உள்ளது. கீழக்குறிச்சியிலிருந்து செல்லும்போது சம்பவ இடம் இடதுபுறமாக உள்ளது. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 முதல் 15 கி.மீ இருக்கும். காவல் நிலையம் மேற்கு திசையில் உள்ளது. சம்பவம் நடந்த புகார்தாரரின் இல்லம் தெற்கு முகமாக உள்ளது. சம்பவம் நடந்த இடத்தின் தென்கிழக்கு புறமாக என்ன உள்ளது என்றால் ஒரு மாடி வீடும், ஒரு ஓட்டு வீடும் உள்ளது. சம்பவ இடத்திற்கு தெற்கில் ஒரு காலிஇடம் உள்ளது, 50 மீ தள்ளி ஒரு வீடு உள்ளது. தென்கிழக்கு திசையில் ஒரு மின்கம்பம் உள்ளது. மேற்கு திசையில் ஒரு கூரை வீடு உள்ளது. சம்பவம் நடந்த இடத்திற்கு போகும்போது நான் மேற்கு லிருந்து கிழக்கு திசை நோக்கி கன்னியாகுறிச்சி கடைத்தெருவிற்கு சென்றேன். நான் எங்கு வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னை சாட்சியாக இருக்க சொல்லி கேட்டதன் பேரில் நான் சாட்சியாக கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை, சம்பவத்தை பற்றி தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவும் இல்லை, போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை